<u>செய்தி வெளியீடு எண்: 464</u> <u>நாள்: 22.09.2016</u>

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>“நவராத்திரி 2016” – மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தொடங்கி வைத்தார்கள்</u>

*******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள் மற்றும் மாநில அளவிலான கண்காட்சிகள் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடவும், அவர்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்திடவும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடவும் சென்னையில் பல்வேறு சிறப்பு கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்று (22.09.2016) சென்னை நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் “நவராத்திரி 2016” விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை **அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி** அவர்கள், மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம் **அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார்** அவர்களுடன் இணைந்து குத்து விளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர்.

இக்கண்காட்சி 22.09.2016 முதல் 13.10.2016 வரை, காலை 10.30 மணிக்கு தொடங்கி மாலை 8.30 மணி வரை நடைபெறும். அனைத்து பண்டிகை விடுமுறை நாட்கள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிறுக்கிழமைகளிலும் விற்பனை நடைபெறும்.

2016 செப்டம்பர் 22 முதல் அக்டோபர் 13 வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியில், மகளிர் சுய உதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்பட்ட நவராத்திரி கொலு பொம்மைகள், தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், வண்ண வண்ண பருத்தி மற்றும் பட்டு ஆடைகள், மங்கையர் மனம் மயக்கும் செயற்கை ஆபரணங்கள், காகிதம், சணல், களிமண் ஆகியவற்றினால் செய்யப்பட்ட பொம்மைகள், புளி, தேன், ராகி, சாமை, சிறு தானிய உணவு பொருட்கள் மற்றும் செராமிக் பொருட்கள், மண் பாண்டப் பொருட்கள், மரப் பொருட்கள், பனை ஓலை பொருட்கள், சுடிதார் மெட்டிரியல்ஸ், மூங்கில் பொருட்கள், நறுமணப் பொருட்கள், கொல்லிமலைப் பொருட்கள், கடல் சிப்பி பொருட்கள், குத்து விளக்குகள், பூஜைப் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் மற்றும் பத்தமடை பாய் பொருட்கள் விற்பனைச் செய்யப்படுகின்றன.

இக்கண்காட்சியில் பொருட்களை விற்பனை செய்திட 32 மாவட்டங்களில் இருந்தும் மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் புதுவாழ்வுத் திட்டம், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி திட்டம் (IFAD) திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களும் மற்றும் திருநங்கையர், மாற்றுத்

திறனாளிகள் ஆகியோரும் இக்கண்காட்சியில் விற்பனை அரங்குகளை அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் நடைபெறவுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் ''நவராத்திரி **2016**'' விற்பனைக் கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பிரத்யேகமாக தயாரித்துள்ள தரமான கொலு பொம்மைகள், கலைப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், நேர்த்தியான பட்டு, பருத்தி மற்றும் கைத்தறி ஆடைகள், மங்கையருக்கான ஆபரணங்கள் ஆகியவை மிக நியாயமான விலையில் பொதுமக்கள் வாங்கி பயன் பெறும் விதமாக தயாரிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அனைவரும் மகளிர் மேளா **"நவராத்திரி 2016"** கண்காட்சிக்கு வருகை புரிந்து சுய உதவிக் குழு மகளிர் விற்பனை செய்யும் பொருட்களை வாங்கி அவர்களது பொருளாதார நிலை உயர்வதற்கு ஒரு உந்துகோலாக இருக்க வேண்டும் என தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**